**செய்தி வெளியீடு எண்:302** **நாள் : 16.06.2014**

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் ஆர்.ஏ.புரத்தில் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடையினை திடீர் ஆய்வு செய்து பொதுமக்களிடம் காய்கறிகளின் தரம் மற்றும் விலை குறித்து கேட்டறிந்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, **மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு** அவர்கள் இன்று 16.6.2014 காலை 10.30 மணியளவில் சென்னை, ஆர்.ஏ. புரத்தில் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடையினை திடீர் ஆய்வு செய்து பொதுமக்களிடம் காய்கறிகளின் தரம் மற்றும் விலை குறித்து கேட்டறிந்தார்.

அப்போது **"மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த ஜுன் 20ந் தேதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 30 பண்ணை பசுமை நுகர்வோர் கடையினை திறந்து வைத்து பொதுமக்களின் வரவேற்பிற்கு ஏற்றவாறு தற்போது 52 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறந்து வைத்து அக்கடைகள் தற்போது நுகர்வோருக்கு குறைந்த விலையில் தரமான காய்கறிகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மேலும், நாளிதழ்களில் வெளிமார்கெட்டை விட கூடுதல் விலையில் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக வந்த செய்திகளின் அடிப்படையில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் / நுகர்வோர்களிடம் விவரங்கள் கேட்டறிந்தார். அப்போது, அங்கிருந்த பொதுமக்கள் / நுகர்வோர் பண்ணை பசுமை நுகர்வோர் கடையில் விற்பனை செய்யப்பட்டு வரும் காய்கறிகள் அனைத்தும் மிகவும் குறைந்த விலையில் தரமாக உள்ளதாக தெரிவித்தார்கள்.

மேலும், இந்நுகர்வோர் கடையினை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள பணியாளர்களுக்கு நுகர்வோர் எந்த புகாரும் கூறாவண்ணம் பணியாற்ற வேண்டும் என்றும், காய்கறிகளை ரேக்குளில் (Tray) ஒழுங்காக அடுக்கி வைத்து பொதுமக்கள் / நுகர்வோர்களுக்கு விற்பனை செய்ய வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இதனை தவறும்பட்சத்தில் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எச்சரித்தார்.

பண்ணை பசுமை நுகர்வோர் கடையின் மூலம் 3,578.673 டன் காய்கறி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.9.9 கோடி ஆகும்.

இவ்வாய்வின்போது, திருவல்லிக்கேணி கூட்டுறவு நகர சங்கத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.குழந்தைவேலு, கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**